**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.06/2025, இ.ம.எண்.07/2025 மற்றும் 08/2025**

in

**அசல் வழக்கு எண்.180/2022**

1. மல்லிகா (இறப்பு) ... மனுதாரர்/வாதி
2. பாலையா
3. ஜெயபிரகாஷ்
4. ஜெய்ராகேஷ்குமார்
5. ஜெயக்குமார் .....மனுதாரர்கள்/உத்தேச 2 முதல் 5 வாதிகள்/ இறந்த வாதியின் வாரிசுகள்

**/எதிர்/**

1. முத்துப்பாண்டியன் (இறப்பு)
2. பரமேஸ்வரி
3. முவ்யா
4. ஜெகதீஷ்
5. ஜெபமணி
6. சதீஷ்குமார்
7. ஜெய்முரளி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 05.08.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.08.21 17:03:45 +0530

கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

மனுதார்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 5, கட்டளை 22 விதி 9 மற்றும் கட்டளை 22 விதி 3 பிரிவு 151–ன் கீழ், இவ்வழக்கில் இறந்துபோன வாதிக்கு பதில் அவரது வாரிசுகளான 2 முதல் 5 மனுதாரர்களை 2 முதல் 5 வாதிகளாக வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 429 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து அபேட்மெண்டை ரத்து செய்து, 2 முதல் 5 மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 வாதிகளாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1)மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.06/2025, இ.ம.எண்.07/2025 மற்றும் 08/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–**

அசல் வழக்கினை 2ம் மனுதாரரின் மனைவியான 1ம் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது வழக்குரை தபசில் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்ததாகவும், இந்நிலையில், பிரதான வழக்கு நிலுவையிலிருந்து வந்த நிலையில், வழக்கின் வாதி கடந்த 14.05.2023ம் தேதியில் அவரது கணவரான 2ம் மனுதாரரையும், மற்றும் மக்களான 3 முதல் 5 மனுதாரர்களையும் மட்டும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் பிரதான வழக்கில் ஒருதலைபட்ச விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த விபரத்தை தனது வழக்கறிஞர் வாதியின் அலைபேசிக்கு தொடர்பு கொண்டபோது, வாதி ஏற்கனவே இறந்துவிட்ட விபரத்தை தெரிவித்ததாகவும், அப்போதுதான் தனது வழக்கறிஞர் அவர்கள் ஒரு வழக்கில் இறந்துபோன நபருக்கு அவர் இறந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் (சட்டப்படியான காலஅவகாசம்) வாரிசுசேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், ஆனால் இவ்வழக்கில் வாதி இறந்து வெகுகாலமாகிவிட்டதால், மேற்படி வழக்கும் இறந்துபோன 1ம் மனுதாரரை பொறுத்து அபேட்மெண்ட் என்னும் தோஷத்திற்கு ஆட்பட்டுவிட்டது என்றும், எனவே வழக்கில் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் அபேட்மெண்ட்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.21 17:03:52 +0530

ஆகியவற்றை மன்னிக்கக்கோரி தனித்தனியே மனுக்களும் தாக்கல் செய்யப்படவேண்டுமெனவும் விபரம் தெரிவித்தார் என்றும், உண்மையில், இவ்வழக்கை தனது மனைவி தாக்கல் செய்த விபரத்தினை தான் அறிந்திருக்கவில்லை என்றும், அதனால் வாதி இறந்த விபரத்தினை உடனடியாக வழக்கறிஞருக்கு தெரிவிக்க இயலவில்லை என்றும், அதனால் தற்போது வழக்கில் இறந்துபோன வாதியைப் பொறுத்து வழக்கில் ஏற்பட்ட அபேட்மெண்டை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதில் 429 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட வேண்டியது அவசியமானது என்றும், அவ்விதம் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடுவதன் மூலமே வழக்கில் இறந்துபோன வாதிக்குரிய வாரிசுகளான 2 முதல் 5 மனுதாரர்களை வழக்கில் சேர்த்துக்கொண்டு மனுதாரர்கள் வழக்கினை மேல்நடத்திக் கொள்ள இயலும் என்றும், ஆகையால் இவ்வழக்கில் இறந்துபோன வாதிக்கு பதில் அவரது வாரிசுகளான 2 முதல் 5 மனுதாரர்களை 2 முதல் 5 வாதிகளாக வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 429 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து அபேட்மெண்டை ரத்து செய்து, 2 முதல் 5 மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 வாதிகளாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

3) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4) இம்மனுக்களானது மனுதாரர்கள்/வாதிகளால், இவ்வழக்கில் இறந்துபோன வாதிக்கு பதில் அவரது வாரிசுகளான 2 முதல் 5

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.21 17:03:59 +0530

மனுதாரர்களை 2 முதல் 5 வாதிகளாக வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட 429 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து அபேட்மெண்டை ரத்து செய்து, 2 முதல் 5 மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 வாதிகளாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இம்மனுக்களின் மனுதாரர்கள் தரப்பில், இவ்வழக்கின் வாதி கடந்த 14.05.2023 ம் தேதியில் அவரது கணவரான 2 ம் மனுதாரரையும், மற்றும் மக்களான 3 முதல் 5 மனுதாரர்களையும் மட்டும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் பிரதான வழக்கில் ஒருதலைபட்ச விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த விபரத்தை தனது வழக்கறிஞர் வாதியின் அலைபேசிக்கு தொடர்பு கொண்டபோது, வாதி ஏற்கனவே இறந்துவிட்ட விபரத்தை தெரிவித்ததாகவும், அப்போதுதான் தனது வழக்கறிஞர் அவர்கள் ஒரு வழக்கில் இறந்துபோன நபருக்கு அவர் இறந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் (சட்டப்படியான காலஅவகாசம்) வாரிசுசேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், ஆனால் இவ்வழக்கில் வாதி இறந்து வெகுகாலமாகிவிட்டதால், மேற்படி வழக்கும் இறந்துபோன 1 ம் மனுதாரரை பொறுத்து அபேட்மெண்ட் என்னும் தோஷத்திற்கு ஆட்பட்டுவிட்டது என்றும், எனவே வழக்கில் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் அபேட்மெண்ட் ஆகியவற்றை மன்னிக்கக்கோரி தனித்தனியே மனுக்களும் தாக்கல் செய்யப்படவேண்டுமெனவும் விபரம் தெரிவித்தார் என்றும், உண்மையில், இவ்வழக்கை தனது மனைவி தாக்கல் செய்த விபரத்தினை தான் அறிந்திருக்கவில்லை என்றும், அதனால் வாதி இறந்த விபரத்தினை உடனடியாக வழக்கறிஞருக்கு தெரிவிக்க இயலவில்லை என்றும், அதனால் தற்போது வழக்கில் இறந்துபோன வாதியைப் பொறுத்து வழக்கில் ஏற்பட்ட அபேட்மெண்டை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.21 17:04:06 +0530

ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்வதில் 429 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) மேற்படி காரணத்தை நிரூபணம் செய்ய மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரர்களால் மனுவில் கூறப்படும் காலதாமதத்திற்கான காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

7) இருப்பினும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 1ம் வாதிக்கு 2 முதல் 5 மனுதாரர்களை வாரிசுகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதால் இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**8) இறுதியாக**

**இ.ம.எண்.06/2025**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**இ.ம.எண்.07/2025**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.21 17:04:12 +0530

**<u>இ.ம.எண்.08/2025</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.21 17:04:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.21 17:04:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.06/2025,
I.A.No.07/2025 and
I.A.No.08/2025
in
O.S.No.180/2022
உத்தரவு (Draft / Fair)
நாள் : 21.08.2025